வேலூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி.புஜானகி இரவீந்திரன், M.Sc., B.Ed., APGDUM,

ந.க.எண்.2630/2023/எப்1, **நாள்:02.02.2024**

பொருள்: மனைப்பிரிவு – வேலூர் மாநகராட்சி – வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம் – வேலூர் வட்டம் – அரியூர் கிராமம் சர்வே எண்.587/3பி1-ல் 0.41 3/4 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்திரவிடுதல் – சார்ந்து.

பார்வை: 1. உறுப்பினர் செயலர், வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் ந.க.எண்.VLR/XCTJDAR2/062-2023, நாள்: 26.06.2023
2. இவ்வலுவலக அறிவிப்பு கடித ந.க.எண்.2630/2023/எப்1, நாள்:28.07.2023
3. அரசாணை எண்.141, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தேதி:16.07.2022
4. மாமன்ற தீர்மானம் எண்.369, நாள்:22.11.2023

.....

பார்வை 1-ல் கண்டுள்ள உறுப்பினர் செயலர், வேலூர் உள்ளூர் திட்ட குழுமம் அவர்களின் கடிதத்தில் வேலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம்-IV பகுதியில் அரியூர் கிராம சர்வே எண்.587/3பி1-ல் 0.41 3/4 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப அனுமதி கீழ்கண்டவாறு தொழில் நுட்ப அனுமதி அளித்துள்ளது. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/வே.உ.தி.கு.(வே.மா) எண்.26/2023 மற்றும் திட்ட அனுமதி எண்.26/2023 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக தொழிநுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தின்படி சாலை கால்வாய் அரசாணைப்படி அமைக்க மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. அதன்படி மனுதாரர் தனது சொந்த செலவிலேயே அடிப்படை வசதிகளான சாலை அமைத்தல், கால்வாய் கட்டுதல் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் ஆகிய பணிகளை செய்துள்ளார். தெரு விளக்கு அமைக்க ரூ.80,000/- சலான் எண்.035/401/2/23-24/0002022, நாள்: 01.09.2023 செலுத்தப்பட்டுள்ளது. பார்வை 4-ல் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தில் ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டும் மாநகராட்சியால் பிற்காலத்தில் விதிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் துணை விதிகள் போன்றவற்றினை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும் மனைப்பிரிவுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்
வேலூர் மாநகராட்சி

2/2/2024

பெறுநர்:-

திரு.ஏ.ரஹ்மான்
க.எண்.2/109, அப்துல்கலாம் ஆசாத் தெரு,
அரியூர், வேலூர்.

நகல்:-

உறுப்பினர் செயலர், வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம்,
வேலூர் அவர்களுக்கு தகவலுக்கு அனுப்பப்படுகிறது.